ISSN: 2320-4842
Vol-18 No. 01 January-March 2024

# கொல்லிப்பாவை ஓவியமா? சிற்பமா?

பேராசிரியர் பா. ஷீலா

## ஆய்வுச்சுருக்கம்

கொல்லி என்றதும் கொல்லி மலையும் அதன்கண் அமைந்த பாவையும்தான் நினைவுக்கு வரும். தமிழ்நாட்டில் நாமக்கல் மாவட்டத்தில் கிழக்குத் தொடர்ச்சி மலையின் ஒரு பகுதியாய்த் திகழும் கொல்லிமலை குளிர் பொருந்திய, உயர்ந்தோங்கிய, வளம்மிக்க மலையாகும். இம்மலை கடையெழு வள்ளல்களில் ஒருவரான ஓரிக்கு உரியதாகும். அடர்ந்த காட்டுப் பகுதியான இம்மலையில் அருவிகள் ஆர்ப்பரித்து விழும். அவற்றில் ஆகாயகங்கை என்னும் வெள்ளருவியின் மேற்கே அமைந்த குடைவரையின் சுவரில் எழுதப்பட்ட கொல்லிப்பாவை என்னும் அழகு மிகுந்த பெண்ணோவியம் தெய்வமாக்கப்பட்டு வழிபடப்பட்டுள்ளது. கொல்லிமலையில் சித்தர்கள், முனிவர்கள் போன்றோர் வாழ்ந்துள்ளனர். அவர்களது தவத்துக்கு இடையூறு ஏற்படாதவாறு அம்மலைப்பகுதியைக் காக்கும் காவல் தெய்வமாக கொல்லிப்பாவை திகழ்ந்தாள். இப்பாவை காற்று வாடை படினும், இளஞ்சிரிப்புக்கொள்ளும். கண்டவரது உள்ளத்தையும் கண் பார்வையுங் கவர்ந்து பெருங்காம வேட்கையை உண்டாக்கி முடிவில் உயிர் போக்கத்தக்க மோகினி வடிவமுடையது என இலக்கியங்கள் கொல்லிப்பாவையின் அழகை வர்ணிக்கின்றன. முனிவர்கள் தங்கி அறம் உரைத்த குடைவரை அறப்பள்ளி என அழைக்கப்பட்டு, அறப்பளீஸ்வரர் கோயிலாகி இருக்கக்கூடும்.

சங்க காலத்தில் தூண்கள், சுவர்கள் போன்ற பகுதிகளில் ஓவியங்கள் வரையப்பட்டு வழிபடப்பட்டதே தவிர கற் சிற்பங்கள் இருந்தமைக்கான ஆதாரங்கள் கிடைக்கப்பெறவில்லை. எனவே, கொல்லிப்பாவை “குடைவரை எழுதிய தெய்வம்” என்பதால் ஓவியமாக இருந்திருக்க வேண்டும். இன்று அது காணக் கிடைக்கவில்லை. இலக்கியங்கள் வாயிலாகவே அப்பாவையின் சிறப்பினை அறிய முடிகிறது.

## முன்னுரை

சித்திரங்களையும் சிற்பங்களையும் இலக்கியக் கண்கொண்டு ஆராயும்போது பல உண்மைகள் புலப்படும். தமிழ்நாட்டில் நாமக்கல் மாவட்டத்தில் தொன்னெடுங் காலம் முதலே இலக்கியச் சிறப்பும், வரலாற்றுச் சிறப்பும் பெற்றுத் திகழும் மலை கொல்லிமலை.[1] இம்மலை கொங்குநாட்டின் புகழுக்கு ஒரு சிறந்த காரணமாக அமையப் பெற்றிருந்தது. இம்மலையில் அமைந்திருந்த கொல்லிப்பாவை இலக்கியச் சிறப்புடையது. தன்னைக் காண்போரைத் தனது பேரழகினால் மயக்கிக் கொல்லவல்ல கொல்லிப்பாவை என்னும்

தெய்வம் குடிகொண்டிருந்ததாகச் சங்ககாலப் புலவர்கள் பாடல்களில் இடம்பெற்றுள்ளது. உலகமே வியந்து போற்றும் இக்கொல்லிப்பாவை சிற்பமா? ஓவியமா? என்பது பலருக்கும் எழும் ஐயப்பாடு. இவ்வய்யப்பாட்டைத் தவிர்க்கச் சங்கப் பாடற்பகுதிகள் வழி அறியலாம்.

## கலைச்சொற்கள்

கொல்லிப்பாவை, வல்வில் ஓரி, குடவரைப் பள்ளி, பாவைக்கூத்து, மாயப்பாவை, கோரக்க சித்தர், காலாங்கிநாத சித்தர்.

## கொல்லிமலை

கிழக்குத் தொடர்ச்சி மலையின் ஓர் அங்கமாய் அமைந்துள்ள கொல்லிமலை சுமார் 1300மீ உயரம் உடையது. இம்மலை வானுயுற ஓங்கி குளிர்பொருந்திய வளம்பல கொண்டு அச்சமூட்டும் வகையில் கடுமையான காடுகளால் சூழ்ந்திருப்பதால் கொல்லிமலை எனப் பெயர் பெற்றிருக்க வேண்டும். கொல்லி எனப்படும் வானளாவிய மரங்களை உடைமையாலும் இப்பெயர் பெற்றிருக்கலாம்.[2] அம்மலையின்கண் இடம்பெற்ற பாவையின் பெயர் கொல்லிப்பாவை எனப் பெயர் வந்திருக்கக்கூடும். கொல்லிமலை தவஞ்செய்வோர்க்கும் தனித்துறைவோர்க்கும் தகுதியான ஏற்ற இடம். தேன், பழம் முதலிய உணவுப்பொருள்கள் மிகுதியாகக் கிடைக்குமிடம். இதன் இயற்கை எழிலையும், செழிப்பையும், சிறப்பையும் கண்ட முனிவர் பலர் அம்மலைப்பகுதியில் தவம் மேற்கொண்டனர்.[3]

கொல்லிமலையிலிருந்து ஆர்ப்பரித்து விழும் ஆகாய கங்கை என்னும் அருவியின் மேற்கிலிருந்த ‘குகை வளைவுப் பாறை குடவரை’ என அழைக்கப் பட்டுள்ளது. இதனருகே குவளை மலர் பூத்துக் கிடக்கும் சுனை இருந்துள்ளது. [4]

சங்க காலத்தில் சேரநாட்டிற்குட்பட்டிருந்த கொல்லிமலை கடையேழு வள்ளல் வல்வில் ஓரியால் ஆளப்பட்டது. இவன் பொ.ஆ. இரண்டாம் நூற்றாண்டிற்கு முன்காலத்தவன்.[5] இவன் காலத்தில் கொல்லிப்பாவை இருந்ததாகச் சங்க இலக்கியம் சான்று பகர்கின்றது. [6]

கோரக்க சித்தர், காலாங்கிநாத சித்தர், குருமுனி போன்ற சித்தர்கள் கொல்லி மலையிலிருந்த இயற்கை குடவரைகளில் தங்கியிருந்து மக்களுக்கு அறம் உரைத்துள்ளனர்.[7] அறச்செயல்கள் செய்வதற்கு அமைத்த பள்ளியாதலால் அப்பகுதி அறைப்பள்ளி, அறப்பள்ளி, அறப்பளி என்று அழைக்கப்பட்டிருக்க வேண்டும்.[8] இத்தல இறைவன் ‘கொல்லியன்’,[9] ‘திரு அறப்பள்ளி உடையார்’[10], ‘அறப்பளீஸ்வரர்’[11],

‘திருவறைப்பள்ளி மகாதேவர்’[12] என்றும், இறைவி ‘ஆளுடை நாச்சியார், தாயம்மை’[13], ‘அறம் வளர்நாயகி’[14] என்றும் அழைக்கப்படுகிறார். தேவார ஆசிரியர்களால் இத்தலம் வைப்புத் தலமாக ‘அறப்பளளி’[15], ‘கொல்லிக் குளிரறைப்பள்ளி’,[16] ‘கள்ளால் கமழ் கொல்லி அறைப்பள்ளி’[17] என்றும் அழைக்கப்படுவதிலிருந்து பொ.ஆ. 7ஆம் நூற்றாண்டிலே அருவியின் மேற்குப்பகுதி ‘குடவரைப் பள்ளி’ எனப் பெயர் பெற்றிருந்தமை தேவாரப் பாடல்களால் தெரிய வருகிறது. இந்த கொல்லிமலையின் மேற்கிலிருந்த பாறை குடவரையில் கொல்லிப்பாவை இடம் பெற்றிருந்ததாகக் கொல்லிமலை வாகடம் எனும் மலை அகராதி சுவடி கூறுகிறது.[18]

## இலக்கியங்களில் கொல்லிப்பாவை

கீழ்க்காணும் சங்கப் பாடல்கள் மற்றும் பக்தி இலக்கியங்கள் கொல்லிப் பாவையின் மேன்மையை பறைசாற்றும் பாடல்களாகும்.

**கடவுள் எழுதிய பாவையின்**[19]

என்பதற்குக் கடவுளாக ஆக்கப்பெற்ற பாவை என்றும்,

> **கடவுள் ஆக்கிய**
> **பலர்புகழ் பாவை**[20]

என்பதற்குக் “கடவுளாக ஆக்கப்பெற்றுப் பலராலும் புகழப்படும் பாவை” என்றும்,

> **பேஎமுதிர்கொல்லிக் கருங்கண் தெய்வம் குடவரை எழுதிய**
> **நல்லியற்பாவை**[21]

என்பதற்கு அச்சம் தருதல் மிக்க கொல்லிமலையினது மேற்குப் பக்கத்தில் கரிய கண்களைக் கொண்ட தெய்வமாக ஆக்கப்பெற்ற நல்ல இயலையுடைய பாவை என்றும்,

> **நெடுவரைத் தெய்வம் எழுதிய**
> **வினைமாண் பாவை**[22]

என்பதற்குத் தெய்வமாக ஆக்கப் பெற்றதும் தொழில் மாட்சிமையுற்றதும் ஆகிய பாவை என்றும்,

> **பூதம் புணர்த்த புத்தியல் பாவை**[23]

என்பதற்குப் பூதமாக (தெய்வமாக) ஆக்கப்பெற்றுப் புதுவதாகச் செய்து நிறுத்தப்பெற்ற பாவை என்றும்,

> **செவ்வேர்ப் பலவின் பயம்கெழுகொல்லித்**

ISSN: 2320-4842
Vol-18 No. 01 January-March 2024

**தெய்வம் காக்கும் தீதுநீர் நெடுங்கோட்டு**
**அவ்வெள் அருவிக் குடவரை யகத்துக்**
**கால்பெரிது இடிப்பினும், கதழ் உறை**
**கடுகினும், உரும் உடன்று எறியினும் ஊறு**
**பல தோன்றினும் பெருநிலம் கிளரினம்**
**திருநல உருவின் மாயா இயற்கைப்**
**பாவையிற் போதல் ஒல்லாள் என**
**நெஞ்சத்தானே**[24]

என்பதற்குக் கொல்லிமலைச் சாரலில் பழங்களோடு கூடிய பலா மரங்கள் நிறைந்துள்ளன. அம்மலை தெய்வத்தால் பாதுகாக்கப்படுகிறது. அங்கு வெண்மையான அருவி உள்ளது. அத்தகைய கொல்லிமலைச் சாரலில் காற்று மோதி அடித்தாலும், மழை மிகுதியாகப் பெய்தாலும், இடி பலமாக இடித்தாலும், இந்த உலகமே சினங்கொண்டு எழுந்தாலும், தன் அழகிய நல்ல வடிவம் கெடாது விளங்கும் கொல்லிப்பாவை என்றும்,

**குவிளையங் கண்ணி கொல்லியம் பாவை**[25]

என்பதற்கு குவளையொத்த கண்களைப் பெற்ற கொல்லிமலைப் பதுமை என்றும், பொருள் கொண்டால் பாவை குடைவரைச் சுவரில் எழுதப்பெற்று தெய்வமாக ஆக்கப்பட்ட தன்மை புலப்படும்.

**நாட்டந்தடுமாறச் செவ்வாய் நலந்திகழத்**
**தீட்டரிய பாவை திருமுகம்**[26]

எனத் தண்டியலங்கார மேற்கோட் செய்யுளில் ஓவியத்தில் எழுதுதற்கு அருமைப்பாடு வாய்ந்த கொல்லிப் பாவை எனப் பொருள் கொள்ளப்படுகிறது. இவ்வாறு கொல்லிப் பாவையைப் பற்றிய செய்தி பண்டைக்காலம் முதற்கொண்டு பரவலாகப் பேசப்பட்டு வருகிறது.

கொல்லிப்பாவையைப் பற்றி மிகுதியாகவும் சிறப்பாகவும் பாடியுள்ள சங்ககாலப் புலவர் பரணர் ஆவார்.[27]

## தாய் வழிபாடு

இயற்கையை வழிபட்டு நன்றி காட்டிய மனிதன், தாய்மை நிலைக்குத் தெய்வ வடிவம் கண்டான். அச்சம் தீர்க்க அச்சந்தரும் பெண் தெய்வத்தையே உருவாக்கிக் கொண்டான். வேட்டை விலங்குகள் கிடைக்க வேண்டுமென்பதற்காக தாய் வழிபாட்டினை

மேற்கொண்டனர். வேட்டைக்கால வாழ்க்கையில் பெண்ணை உணவு தேடுதலுக்கான முயற்சியில் துணையாகவும், விலங்குகளை வெல்லுவதற்குத் துணைபுரியும் ஆற்றலை அளிப்பதாகவும் கருதினர். தொன்மையான பாறை – குகை ஓவியங்களில் தாய் வழிபாட்டின் கூறுகள் காணப்படுகின்றன. [28]

## காவல் தெய்வம்

மலைப்பிளப்பிலும், குகைகளாகக் கொண்ட மலைப் பக்கத்திலும், குன்றிடத்தும் பெண் தெய்வம் வாழ்ந்ததாக மக்கள் நம்பியதை பதிற்றுப்பத்தின் பாடல் வரிகளால் அறியலாம்.[29] அவை மக்களைத் தீயசக்திகளினின்றும் தீயவர்களிடமிருந்தும் காக்கும் காவல் தெய்வங்களாக வழிபடப்பட்டு வந்தன. காவிரிப்பூம்பட்டினம் சதுக்கப்பூதம்[30] போன்று கொல்லிமலையில் நிறுவப்பட்ட காவல் தெய்வமே 'கொல்லிப்பாவை' ஆகும். இத்தெய்வம் கரிய கண்களையுடைய தெய்வமாக ஆக்கப்பெற்றுப் பலராலும் புகழப்படும் பாவையாக்கப்பட்டது. கொல்லிமலை கொங்கு நாட்டின் எல்லையில் அமைந்துள்ளதால் இம்மலையில் எல்லைக் காவல்தெய்வமாக விளங்கியிருக்க வேண்டும். முனிவர்களன்றி மக்களும் வணங்கியிருக்கவேண்டும். வல்வில் ஓரி காலத்தில் கொல்லிப்பாவை இருந்துள்ளது என்பதை சங்க இலக்கியங்கள்வழி அறியலாம்.[31]

எனவே கொல்லிப்பாவையின் காலம் சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டது என்பதில் ஐயமொன்றுமில்லை. அழகும் ஆடவர்க்கு இணையான வீரமும் உடல் வலிமையும் பெற்றிருந்த மலைநாட்டு பாவை தீயவர்களை அழிப்பதைத் தன் கடமையாய்க் கருதினாள். அவள் இறந்தபிறகு அவளது வீரத்தை மெச்சி தெய்வமாக வழிபடப்பட்டிருக்க வேண்டும்.[32] அச்சந் தீர்க்க வேண்டி, அச்சந்தரும் பெண் தெய்வத்தையே உருவாக்கிக் கொண்டனர் போலும்.

## கொல்லிப்பாவையின் பேரழகு

கொல்லிப்பாவை பேரழகு மிக்க ஓர் எழில் நங்கையின் வடிவத்தோடு விளங்கியது. முப்பரிமாண நிழற்படம் போன்று இயங்கும் தன்மையுடையதாக (இயந்திரப் பாவை) அல்லது மெய்ப்பாட்டுடையதாகக் கருதப்படுகிறது. அதன் அருகே வரும்போது, வாடை பட்டவுடன் தானே நகை செய்யுமாறு அப்பாவை கண்டவரின் உள்ளத்தைக் கதுமெனக் கவ்வும் கொள்ளை அழகுடன் அப்பாவை திகழ்ந்துள்ளது. மெய்ப்பாட்டுடன் கூடிய சிற்பங்களும் ஓவியங்களும் அழகுணர்ச்சியுடன் மிளிரும். இத்தகு மெய்ப்பாட்டைச் சிற்பங்களைவிட ஓவியங்களில் மிகுதியாகக் காணலாம். கொல்லிப்பாவை காண்பவர்

உள்ளத்தையும் கண்ணையும் கவர்ந்து அவர்கட்கு பெருங்காம வேட்கையை வருவித்து இறுதியிற் கொல்லத்தக்க மோகினி வடிவமுடையதாகும். இப்பாவையை நோக்கியவர் அஃது இயங்குவதையும் நகைப்பதையும் கண்டு மடந்தை போலுமென்று மயங்கிக் காமநோய் கொண்டு கிடந்து மடிவர் என்று கூறப்படுகிறது.[33] கொல்லிப்பாவை தோற்றத்தில் பாவை போல இருப்பினும் பெறுதற்கு அரிய மாயத் தோற்றமுடையவள். இத்தகைய மாயத்தோற்றத்தை உருவாக்குவது ஓவியக்கலையிலேயே சாத்தியமாகும். இவ்வாறு அழிக்கவும் ஒழிக்கவும் இப்பாவையின் செயல்திறம் அமைந்ததால் கொல்லிப்பாவை எனும் பெயர் பெற்றிருக்க வேண்டும்.

பெண்ணினது மிக்க அழகை விளக்குவதற்காக அவ்வழகு ஆடவரைக் கொல்லும் தன்மையது என்று கூறுவது ஒரு வகையான அழகியலாகும். எனவே, அழகிய பெண்களை கொல்லிப்பாவையோடு ஒப்பிடுவர்.

சிலப்பதிகாரத்தில் மாதவி ஆடியதாகக் கூறப்படும் பதினோராடல்களில் ஒன்றாகிய பாவைக்கூத்து என்பது திருமகள், கொல்லிப்பாவை வடிவங்கொண்டு அசுரர்கள் தன்னைக் கண்டு மோகித்து விழுமாறு ஆடிய கூத்தாகும்.[34] சிவபெருமான் (திரிபுராந்தகர்) அசுரர்களின் மூன்று கோட்டைகளை அழிப்பதற்குச் சென்றவர் அவற்றைப் பார்த்து, அவை நமது வீரத்திற்கு ஒரு பொருட்டா? என எண்ணி எள்ளல் (நகை) கொள்கின்றார். இதனைக் கூறுமிடத்து,

**திரிபுரத்தைச் செற்றவனுங்**
**கொல்லிச் செழும் பாவையு நகைக்கக்**
**கற்றதெல்லா மித்த நகை கண்டேயோ?**
**கொல்லிப்பாவை அன்னாய்**[35]

என்பது இலக்கிய வழக்கு. இவற்றின்மூலம் கொல்லிப்பாவை இயங்கும் தன்மையுடைய அழகியலுடன் அமைந்து தமிழ் மக்களின் உள்ளங்களைக் கவர்ந்துள்ளது.

இக்கொல்லிப்பாவை குடவரைச் சுவரில் இடம் பெற்றிருந்தமையால் காற்று மோதி அடித்தாலும், மழை விரைந்து வீசினாலும், இடி மோதினாலும், உலகமே பிறழ்ந்தாலும் வேறு எந்தவித ஊறுகள் வந்தாலும் தன் அழகு கெடாமல் இருக்கும் என நம்பப்பட்டுள்ளது.[36]

**தெய்வம் குடவரை எழுதிய வினைமாண் பாவை**

என்று கூறப்படுதலால் கொல்லிமலையின்கண் அமைந்த கொல்லிப்பாவை இயற்கை குடவரை சுவரில் கண்கவர் வனப்புடன் நுண்ணிய வேலைப்பாடுகளுடன் தெய்வத்தால் அமைக்கப்பட்டதாக அறிய முடிகிறது.[37] இத்தகைய எழில் பாவை கடவுளாக ஆக்கிய பலர் புகழ் பாவை என்ற நம்பிக்கையே இதனடிப்படையாகும்.

## ஓவியம் எழுதுதல்

மலையின் இடைப்பகுதியில் எழிலார்ந்த சூழ்நிலையில் இயற்கைக் குகைத் தளங்களில் ஓவியங்கள் தீட்டப்படும்.38 இவற்றை ஓவிய எழுத்துகள் என்பர். தமிழிலக்கியத்தில் எழுத்து என்பதற்கு ஓவியம் என்ற பொருள் உண்டு. சிற்பி தான் செதுக்கவிருக்கும் உருவத்தை வரைந்து பார்த்த பின்னர் அவ்வோவியத்தைக் கொண்டு கல்லில் உரு சமைத்தல் வழக்கம்.

**ஓவியத்து எழுத ஒண்ணா உருவம்**

என்று இலக்கியங்கள் எழிலார்ந்த உருவங்களைக் கூறும். [39]

**சுவரில் உருவெழுதி**

வழிபடுவார்கள். [40]

பரிபாடல் திருப்பரங்குன்றத்து ஓவிய மண்டபத்தை 'எழுத்து மண்டபம்' என்றே அழைக்கிறது.[41]

**சித்திரத்தால் எழுதியந்த செய்ய மண்டபம் இயற்றி**[42]

என்று மதுரை புதுமண்டபம் ஓவியத்தால் அழகுறச் செய்ததாகப் போற்றப்படுகிறது.

மேற்காணும் இலக்கியத் தொடர்களின் மூலம் எழிலார்ந்த சுவர்களில் ஓவியங்கள் தீட்டப்படுதல் எழுதுதல் என்றே கூறப்படுகிறது.

சங்க காலத்தில் இறைத் திருவுருவங்கள் கோயில்களில் நிறுவப்பட்டு மக்களால் வழிபடப்பட்டிருக்கிறது.[43] ஆனால், அவ்விறைத் திருவுருவங்கள் கல்லினால் செய்யப்பட்டவை என்று அறுதியிட்டுக் கூறுவதற்கில்லை.

பூம்புகார், காஞ்சி போன்ற மாநகரங்களில் மரங்கொல் தச்சரும், மண்ணீட்டாளரும், செம்பு செய்ஞ்ஞரும், பைம்பொன் செய்ஞ்ஞரும் இருந்திருக்கின்றனர். [44]

பொதுவாகப் பல்லவர் காலத்திற்கு முற்பட்ட தமிழகத்தில் (பொ.ஆ. 6ஆம் நூற்றாண்டிற்கு முன்) சைவ, வைணவ சமயத்தவர் கல்லினால் செய்யப்பட்ட திருவுருவங்களை

வழிபடவில்லையெனவும், அதற்குப் பதிலாக மரம், சுதை முதலியவற்றினால் கடவுளரது திருவுருவங்களை உருவாக்கி வழிபட்டனரெனவும் அறிஞர்கள் கருதுகின்றனர். இவையன்றிக் கோயில்களில் இறைவனது வடிவமே ஓவியமாகவும் தீட்டப்பெற்று வழிபடப்பட்டு வந்ததாகவும் கூறப்படுகிறது.

தமிழ்மக்கள் கல்லை இறப்புடன் தொடர்புபடுத்தியமையால் (நடுகல் வழிபாடு)[45] மங்கலமான இறைத் திருவுருவங்களுக்கு முற்காலத்தில் கல்லினைப் பயன்படுத்தியதில்லை. இதனை மெய்ப்பிக்கும் வகையில் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் நடைபெற்ற அகழ்வாய்வுகளில் (கீழடி உட்பட) பல்லவருக்கு முற்பட்ட காலத்தில் உருவாக்கப்பட்ட கற்சிற்பங்கள் எவையும் கிடைக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். சங்க நூல்களில் கந்திற்பாவை, கொல்லிக் குடைவரைத் தெய்வம் ஆகியவை பற்றிக் கூறியிருப்பினும், அவை கல்லினால் அமைக்கப்பட்டவை என உறுதியாகக் கூறுதற்குரிய சான்றுகளில்லை.

எனவே, சங்க காலத் தமிழகத்தில் இறைத் திருவுருவங்கள் கற்சிற்பங்களாக உருவாக்கப்படவில்லையென வரையறை செய்தபோதிலும், பிற பொருள்களினால் செய்யப்பட்ட இறை வடிவங்களும், கல்லினால் வடிக்கப்பட்ட நடுகற்களும் இருந்தனவென்பது அறிதற்பாலதாகும்.[46]

பதிற்றுப்பத்தின் உரையாசிரியர்,

**ஓவத் தன்ன உருகெழு நெடுநகர்ப்**
**பாவை யன்ன மகளிர் நாப்பண்**[47]

என்ற பாடல் வரிகளுக்குச் சித்திரத்தைப் போன்ற அழகுடைய, பகைவர்க்கு அச்சம் பொருந்திய அரண்மனையில், கொல்லிப்பாவையைப் போன்ற வடிவழகையுடைய மகளிடத்து நடுவே என்றும்,

**ஓவத் தன்ன வினைபுனை நல்லிற்**
**பாவை யன்ன நல்லோன் கணவன்**[48]

என்னும் அடிகளுக்குச் “சித்திரத்தைப் போன்ற தொழில் புனைந்த நல்ல மனையின் கண்ணே உள்ள கொல்லிப்பாவையைப் போன்ற வடிவையுடைய நல்லோளுக்குக் கணவன்” என்றும்,

**வல்லவன் தைஇய பாவை கொல்?** [49]

என்னும் கலித்தொகையடிக்குக் “கொல்லிமலையிலே வல்லவனாலே பண்ணப்பட்ட ஒப்பில்லாத பாவையோ?” என்று பொருள் கூறியுள்ளனர்.

தொடக்கக் காலத்தில் மனிதன் தன் உள்ளத்தில் எழுந்த உணர்ச்சிகளைச் சித்திரமாக வடிக்க முடியாவிட்டாலும், தான் கண்ட பொருள்களி:ன் உருவங்களைக் குகைகளில் தீட்டியிருக்கிறான்.[50] கற்கால மனிதன் மிருகங்களின் வடிவினையும், வேட்டைக் காட்சிகளையும், மனித உருவங்களையும் தான் வாழ்ந்து வந்த குகைகளில் சித்திரமாக வரைந்திருக்கிறான். தமிழகத்தில் இத்தகைய சித்திரங்கள் கீழ்வளை, செத்தவரை, மல்லப்பாடி[51] முதலிய இடங்களிலுள்ள மலைக்குகைகளில் இடம்பெற்றிருக்கின்றன. பெருங்கற்காலத்தில் எளிமையாகப் பாறையில் தொடங்கப்பட்ட ஓவியக்கலை சங்க காலத்தில் வண்ணச் சுதைகளில் சுவரோவியங்களாக மிளிர்கிறது.

சங்க காலத்தில் ஓவியக்கலை சிறந்திருந்ததை அக்கால நூல்கள் திறம்படக் கூறுகின்றன. மன்னர்களும் மக்களும் இக்கலையினைப் பெரிதும் போற்றியுள்ளனர். கோயில்களும் அரண்மனைகளும் மண்டபங்களும்[52] ஓவியங்களைப் பெற்றுத் திகழ்ந்திருக்கின்றன. ஓவியம் பற்றிய நூலும், அவற்றின் விளக்க உரைகளும் இருந்தமையை மணிமேகலையால் அறியலாம். [53]

ஓரி வள்ளலினுடைய கொல்லிமலையின் குடவரையில் வரைந்துள்ள பாவை கண்டார்க்கு மடமை வரச் செய்பவள் என குறுந்தொகை பாடலில் கூறப்பட்டுள்ளது. [54]

## புராணக்கதை

அசுரர்களிடமிருந்து தேவர்களைக் காப்பாற்ற, காண்பவர் கண்களையும், கருத்தையும் கவர்ந்து காமம் உறுவித்து மயக்கிக் கொல்லவல்ல ஓர் அழகிய பாவையின் படிமம் தெய்வதச்சன் மயன் என்பவனால் செய்தளிக்கப்பட்டமையால் அப்பாவைப் படிமத்திற்குக் “கொல்லிப்பாவை” என பெயரமைந்தது என்ற கதையும் நிலவுகிறது.[51]

## அறப்பள்ளி

மூலிகைகள் நிறைந்த பகுதியாக கொல்லிமலை விளங்குகிறது. கொல்லிமலையின் இயற்கை எழிலையும், செழிப்பையும், சிறப்பையும் கண்ட முனிவர் பலர் அம்மலைப் பகுதிகளில் தவம் மேற்கொண்டனர். கோரக்க மகரிஷி போன்ற பல சித்தர்கள் வாழ்ந்துள்ளனர். தங்களது தவத்திற்கு தீங்கு நேரா வண்ணம் கொல்லிமலைப் பாவையை அமைத்திருக்க வேண்டும்.

கொங்கு நாட்டில் கடைச்சங்க காலத்தில் பௌத்த அல்லது ஜைன மதத் துறவிகள் மலைக்குகைகளில் வாழ்ந்துள்ளனர் என்பதற்கு சான்றுகள் கிடைத்துள்ளன.[56] கர்நாடகாவிலிருந்து கொங்கு நாட்டின் வழியாக தமிழ்நாட்டிற்குள் சமணம் வந்திருக்க வேண்டும் என்பது ஆய்வாளர்ளின் கருத்தாகும்.[57]

புத்த, சமணத் துறவியர் வாழ்ந்து வழிபட்ட இடங்களில் மகளிரின் அழகை எழுதிப் படைத்தனர். அதன் நோக்கம் துறவு மேற்கொண்ட முனிவர்களின் மனதில் இவ்வெழில் உருவங்கள்கூடச் சலனத்தை உண்டாக்கக்கூடாது என்பதற்காக, அறவாழி அந்தணன் கூறும் அறத்தைக் கேட்க உள்ளே நுழைவதன் முன்னர் தங்கள் மனதைச் சோதித்துக் கொள்ள வரைந்துள்ளனர். இதனைச் சித்தன்னவாசல் ஓவியங்களில் காணலாம்.[58] எனவே, கொல்லிப்பாவை சித்தன்னவாசல் ஓவியங்களில் இடம்பெற்றுள்ள ஆடல் மகளிருக்கு முன்னோடியாக அமைந்துள்ளது. ஆனால், உண்மையில் பெண்மை என்பதோ அழகு என்பதோ எந்தச் சமயத்தாலும் புறக்கணிக்க இயல்பவை அல்ல.

தமிழகத்தில் ஆங்காங்கே காணப்படும் குடவரைகளும் சமணப் பள்ளிகளும் வரலாற்றுச் சான்றுகளாக உதவுகின்றன. அவை சமணர்களின் உறைவிடமாக இருந்து வந்துள்ளது நன்கு புலப்படுகிறது. கொல்லிமலைப் பகுதிகளான கிராங்காடு, வீரகனூர் போன்ற இடங்களில் சமணத் துறவிகளின் சிற்பங்கள் கிடைத்துள்ளன. [59]

## முடிவுரை

இதுகாறும் கூறியவற்றால் கொல்லிப்பாவை குடவரையில் எழுதிய அழகிய பெண்ணோவியம் என்பது நன்கு தெளிவாகிறது. அதைக் காண்பவர் கண்களுக்கு இயக்கமுள்ள ஓர் எழிலார்ந்த படைப்பாக அமைந்திருந்தமையால் இதனைத் தெய்வமாக்கியிருக்க வேண்டும். இதன் இயல்பு நோக்க அது ஒரு மாயப்பாவையாகத் தோன்றுகிறது. எனவே, கொல்லிப்பாவை உலகம் வியக்கும் ஒப்பரும் ஓவியம், உன்னதப் படைப்பு, கலையின் சிகரத்தை எட்டியுள்ளது என்பதில் மிகையில்லை.

## சான்றெண் விளக்கம்

1. **The Imperial Gazetteer of India**, Vol. XXI, p. 543.
2. ஜீ.ச. முரளி, **தமிழக சிவத்தலங்கள்,** ப. 214
3. ஆ. சிங்காரவேலு முதலியார், **அபிதான சிந்தாமணி,** பக். 510–511.
4. தங்கவயல் லோகிதாசனார், **வள்ளல் வல்வில் ஓரி,** ப. 152.

5. தமிழ்நாட்டு வரலாற்றுக்குழு, **தமிழ்நாட்டு வரலாறு,** பக். 402–403.
6. **குறுந்தொகை,** பா. 100.
7. ப. புஷ்பநாதன், **அருள்மிகு அறப்பளீஸ்வரர் திருக்கோயில் திருத்தல வரலாறு,** ப. 40.
8. **மேலது,** ப. 12.
9. **திருநாவுக்கரசர் தேவாரம்,** V, 34 – 1.
10. **A.R.E.,** 490 of 1930.
11. **Ibid,** 489 of 1930.
12. **Ibid,** 493 of 1930.
13. **Ibid,** 490 of 1930.
14. ப. புஷ்பநாதன், **மு.கா.நூ.,** ப. 14
15. **திருநாவுக்கரசர் தேவாரம்,** 6-70-2.
16. **சம்பந்தர் தேவாரம்,** II – 39 – 4 – 1.
17. **திருநாவுக்கரசர் தேவாரம்,** 6-71-2.
18. **கொல்லிமலை வாகடம்** எனும் மலை அகராதி சுவடி.
19. **அகநானூறு,** பா. 63.
20. **மேலது,** பா. 209.
21. **குறுந்தொகை,** பா. 89.
22. **நற்றிணை,** பா. 185.
23. **மேலது,** பா. 192.
24. **மேலது,** பா. 261.
25. **நாலாயிர திவ்ய பிரபந்தம்,** திருமங்கையாழ்வார், பெரிய திருமொழி, 1108, 2–7–1.
26. **தண்டியலங்காரம்,** பொருளணியியல், 2–ஆ, சூ.32–2, ப. 67.
27. தங்கவயல் லோகிதாசனார், **மு.கா.நூ,** ப. 147.
28. கோ. கிருட்டிணமூர்த்தி, **காளி வழிபாடு,** பக். 29–31.
29. **பதிற்றுப்பத்து,** 88–2.
30. **சிலப்பதிகாரம்,** 5:65–67.
31. **குறுந்தொகை,** பா. 100.
32. வீ. சண்முகம், **"கொல்லிப்பாவை கோயிலும் வழிபாடும்",** நாட்டுப்புறத் தெய்வங்கள், பக். 147–150.
33. **குறுந்தொகை,** பா. 39.
34. **சிலப்பதிகாரம்,** 6:60–71.

35. **சித்திரமடல்; திருவாசகம்,** பா. வரி. 158. “ஏற்றார் மூதூர் ஏழினகை வீழ்வித் தாங்கு ஏரியின்”
36. **நற்றிணை,** பா. 261
37. **மேலது,** பா. 185.
38. K.V. Raman, **Ancient Cave Paintings in Tamilnadu,**
39. **கம்பராமாயணம்,** கிட்கிந்தா காண்டம், 7. வாலிவதைப் படலம், “கோ இயல் தருமம்...” 86–2.
40. **மணிமேகலை,** காதை, 3; 126–131.
41. **பரிபாடல்,** பா. 19:53, 21:28.
42. **மதுரைத் திருப்பணிமாலை,** “சித்திரமும் எழுதியந்த செய்த மண்டபம்,” 86–2; இரா. நாகசாமி, **ஓவியப்பாவை**, பக். 163–164.
43. **சிலப்பதிகாரம்,** 5:168–177
44. **மேலது,** 5:28–29 & **மணிமேகலை,** 28:34–36.
45. **தொல்காப்பியம்,** புறத். 5.
46. ஏ. ஏகாம்பரநாதன், **தமிழகச் சிற்ப ஓவியக்கலைகள்,** ப. 7.
47. **பதிற்றுப்பத்து,** பா. 88:28–29.
48. **மேலது,** பா. 61:3–4.
49. **கலித்தொகை,** பா. 56:7.
50. சி. சிவராமமூர்த்தி, மே.சு. இராமசுவாமி (தமிழாக்கம்), **இந்திய ஓவியம்,** பக். 28–30.
51. ஏ.எஸ். இராமன், **தமிழ்நாட்டு ஓவியங்கள்,** பக். 32–43.
52. **நெடுநல்வாடை,** 159–163.
53. **மணிமேகலை,** 2:30, “ஓவியச் செந்நூல் உரை நூற்கிடக்கையும்.”
54. **குறுந்தொகை,** பா. 100. “வல்வில் ஓரி கொல்லிக்குக் குடைவரைப் பாவை”
55. ப. புஷ்பநாதன், **மு.கா.நூ.,** பக். 6–7.
56. **Annual Report on South Indian Epigraphy,** 1927 – 28, Part II, Para 1; 1961-62, p. 10.
57. அர. சம்பகலட்சுமி, “கொங்கு நாட்டில் சமணம்”, **சமணத்தடயம்,** பக். 46–54.
58. சி. சிவராமமூர்த்தி, **மு.கா.நூ.,** பக். 69–70.
59. தங்கவயல் லோகிதாசனார், **மு.கா.நூ.,** ப. 182